
உ

R. நடராஜாச்சாரி, தஞ்சை. T. M கோவிந்தசாமி முதலியார்
மதுரை கள்ளபபாட். A M. கார்மேக ஆச்சாரி
இவர்களும் இன்னும் பல நடிகர்களாலும் நடத்திவரும்
பார்ஸி அதிநூதன

அதிரூப அமராவதி டிராமா.

(இரண்டு பாகமும் அடங்கியது)

போலி புத்தகங்களை கண்டு ஏமாறாமல்



K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாக பார்த்து வாங்கவும்.

சென்னை முத்தியாலுப்பேட்டை, பால சந்தச் சரபக்கவி,
... செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று
... யாரவர்களால் பிரசுரிக்கப்பெற்றது.
1932 | விலை அணா 4.

உ

R. நடராஜாச்சாரி, தஞ்சை. T. M கோவிந்தசாமி முதலியார்

மதுரை கள்ளப்பார்ட். A M. காரமேக ஆச்சாரி

இவர்களும் இன்னும் பல நடிகர்களாலும் நடத்திவரும்

பார்ஸி அதிநூதன

அதிரூப அமராவதி

டிராமா.

சம்பூர்ணம்.



சென்னை, முத்தியாலுப்பேட்டை, பால சந்தச் சரபக்கவி,

V. A. தியாகராஜ செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று

K. A. மதுரை முதலியாரவர்களால் பிரசுரிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர்ட்.] 1932. [விலை அணு 4.

இந்நூலாசிரியர்.



சென்னை, முத்தியாலுப் பேட்டை
பாலசந்தச் சரபங்கவி.
V. A. தியாகராஜ செட்டியார்.

உ

ஸ்ரீ வேலுமயிலுந் துணை.



பற்பல டிராமா கம்பெனிகளிலும் பாடியாடி நடித்துவரும்

பார்ஸி அதிநூதன

அதிரூப அமராவதி

டிராமா.

வினாயகா துதி வெண்பா.

அவனிதனில் அதிரூப அமராவதி சரிதை
உவமையுட னேசிறுவன் உண்மையாய்—கவனமதில்
சந்ததமும் வைத்துவனை சாற்றினே னருள்தந்து
கந்தனுக்கு மூத்தவனே கார்.

சீன் :—1.] **[இடம்:—விந்தமாபுரி தர்பார்.**

விச்சித்திரரூபன் தரு.

சன்யாசம் சன்மார்க்கம் என்ற மெட்டு.

பல்லவி.

என்னையாள் கண்யனே
ஏகப்பரம் பொருளே வேகமாய் வந்திவ்வேளை (எ)

அநுபல்லவி.

பெண்ணுளுமையவள் மன்ன இதுசதி
உன்னை துதித்து யான் சொன்னேன் குறைநிதி (எ)

சரணங்கள்.

கண் மூன்றுடையதோர் கடவுளை போற்றி
காதகனுனையனு தினந்தின மேற்றி
விண்ணுலகில் துதித்தேன் விமலனே தூற்றி
விடை மீதேறி இப்போதே வந்து காப்பாற்றி (எ)

திரிபுரத்தை யெரித்த தீர ஓய்யாரா
திகம்பரியாள் மகிழும் தெய்வீக மாரா
அரியயன் தேடிக்காணு அகில ஓங்காரா
அரவா பரணமதை அணிந்த கெம்பீரா (எ)

சத்துசித்தானந்த சமரச மூர்த்தி
சாதுசங்கமர்தினம் தியானிக்கும் பூர்த்தி
நத்தியே தியாகராஜன் நறுமலர் சாத்தி
நாளும் கவியுரைத்தேன் நயந்தருள் சீர்த்தி (எ)

விசித்-வ-ம்:—அறிவிற் சிறந்த எனது அமைச்சரே, எப்புவியிலும் ஒப்பிலாத இப்புவியாகிய விந்தமாபுரியை, எனை அருந்தவத்தினின்றெடுத்த அன்னை தந்தையர்களின் அதிமேன்மையான தபோபலத்தினுலும், எம்மரபின் பெரியோர்களின் ஆசிரைக்கொண்டும், அகிலத்திற்கே ஆதரவாய் விளங்காநின்ற அந்த அம்பலவாணனின் அருளைக்கொண்டும், இவ்வடியேன் இந்நகரை என்முன்னோர்களின் முறையைத் தவராது மிக மேன்மையுடன் அரசுசெலுத்த துடங்கினன். தவிறவும், நமது தேசிய விஷயங்களையும் சற்று விசாரிக்க என்மனதில் கவனமுற்றிருக்கின்றேன். உனது மனவிருப்பமெவ்வாரோ?

மங்-வ-ம்:—தங்கள் கேட்கும் கேள்விகளுக்கு தகுந்தவிடையளிக்கவும், தங்கள் மன சந்தேகங்களை நிவர்த்தித்து தக்க யோசனைகளைச் செப்பவும், கடமைபூண்டிருக்கும் யாங்கள் தற்போது நீர் வினவும் வினவிற்கு விடையளிக்க மறப்போமா? அது ஒன்றுதானில்லை! ஆதலால் யாதொரு மனக்கிலேசமுமின்றி தெரிவியுங்கள்?

விசித்-வ-ம்:—சந்தோஷம்! ஆயினும் நமது நகரின்கண் வசித்திராநின்ற குடிகள் க்ஷேமலாபத்துடனும், வேதியர்கள் சதா வேத கோஷ்டங்களோதும் விதிமுறைகளையும், ஆலயங்களில் ஆறு

கால பூஜைகள் அனுதினமும் அட்டியின்றி நடந்தேறுவதையும், மழைமாரிகளின் மாக்ஷிமைகளையும், அதிவிபரமாக எனக்கு தெரிவிப்பீராக?

மந்-வ-ம்:—பிரபூ! நம் நாட்டினிடமாக திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிராநின்ற பற்பல க்ஷேத்திரங்களிலும் ஆறுகால பூஜைகள் அட்டியின்றி நடந்தேரிவருவதுமின்றி, மறையவர் மொழியும் மந்திரயாக பலத்தினால் மாதமும்மாரிப் பெய்து அதின் பொருட்டு செந்நெல்களுடன் பற்பல தானியங்களும் குறைவின்றி வளர்ந்து அதனால் நமது குடிப்படைகள் சுகஜீவியாகவு மிருக்கின்றனர் ஐயனே!

விசித்-வ-ம்:—குதூஹலமடைந்தேன், மந்திரி தவிரவும், தற்போது எனக்கோ, வாலை யென்னும் யௌவனப்பருவம் நீங்கி விருத்தாப்பியப்பருவ மேற்பட்டுள்ள தால், இச்செங்கோலைத்தாங்கி ராஜ்யபரிபாலனார்த்தத்தை கவனிக்க கூடவில்லையாதலால் இப்பட்டத்தை எனதருந்தவக் குழந்தையாகிய அதிரூபனுக்கு சூட்டி, கண்குளிரப் பார்க்கலாமென என்னுளக்கருத்து அதின் பொருட்டு உன் மனவிருப்ப மெவ்வாரோ?

மந்-வ-ம்:—அரசே! தங்களின் மைந்தரின் அதிவீர பராக்கிரமச் செய்கைகளுக்கும், புத்திச் சாதுர்யத்திற்கும் இந்த ராஜ்யத்தை அரசுசெலுத்துவது ஒரு பெருங்காரியமா? ஆதலால் இனி ஒருநிமையேனும் தாமதியாமல் தங்களின் மனக்கொள்கைபடியே பட்டத்தைச் சூட்டி கண்குளிரப் பாருங்கள்.

விசித்-வ-ம்:—சந்தோஷம்! அடே! சேவக் நீ சென்று எனது புத்திரனாகிய அதிரூபனை அதிசீக்கிரத்தில் யானழைத்ததாக அழைத்துவருவாய்.

சேவ-வ-ம்:—அப்படியே மகாபாக்கியம் பிரபூ!

[சேவகன் போகிறான் அதிரூபன் வருகிறான்.]

அதி-வ-ம்:—தந்தையே நமஸ்கரிக்கிறேன்.

வியத்-வ-ம்:—மைந்தா! கல்யாண்! எழுந்திரு.

அதி-வ-ம்:—பிதா! இது நாளன்றி இவ்வடியேனை ஒரு பொருட்டாக இவ்விடத்தில் அழைப்பித்த காரணம் யாதோ?

விசி-வ-ம்:—வத்ஸா! உனை இங்கு யானழைத்த காரணமென்னவென்றாலோ!

நிச்சயமாய்த் தீர்க்க கடனுக்கு வழி என்ற மெட்டு.

பல்லவி.

ஒப்பிலா இப்புவியை தப்பிதமின்றியாள
உந்தனை இங்கு அழைத்தேன் (ஒ)

அனுபல்லவி.

எப்படியேனு மெந்தன் ஏக்கமதை தவிர்த்து
அப்பனே மைந்தா நிதான் அரசுசெய்வா யுகந்து (ஒ)

விருத்தம்.

விருத்தாப்பிய பருவத்தாலே வேதனை யதிகங்கொண்டு
கருதியிச் செங்கோல்தாங்க கருத்ததை இழந்ததன்றி
உருக்கமாய் நாட்டைகார்க்க ஒன்றுமே நடவாதாலே
பொருத்தமாய் உனக்கேபட்டம் புனைந்திட அழைத்தேன்மைந்தா.

சரணம்.

கைப்பற்றியே நீ நாட்டை கருத்துடன் ராஜ நீதி
காட்டியே இருந்திடுவாய்
செப்பத்தர மில்லாத சீர்மிகும் விந்தபுரி
செழித்திட பொருந்திடுவாய்

எப்பதிலும் சொல்லாதே
எந்தன் வார்த்தை தள்ளாதே
கப்பிய துயா பொல்லாதே
கால மெனக்கு நில்லாதே (ஒ)

விசித்-வ-ம்:—வத்ஸா! இதின் பொருட்டுதான் உனை இவ்வி டத்திலழைத்தேன் இதற்கு நீ யாதொரு தடையுமிலாது ஒப்புக் கொண்டு ராஜ்ய பரிபாலனார்த்தம் செய்வாயாக.

அதி-வ-ம்:—(அதிரூபன் வருத்தமுடன்) தந்தையே, தாங்கள் கூறியதும் உண்மையே? ஆயினும், தற்போது யான் தங்களின் நல்வினை பயனின் பொருட்டு இந்த ராஜவம்சத்திலுதித்து வெகு மேன்மையாய் வளர்ந்ததுமன்றி, வேந்தர்களுக்கு வேண்டிய கல்வி, ஞானம் முதலியவற்றை கசடறக்கற்றேனாதலின், இவ்வுலகானுபவத்தை எள்ளளவேனு மறிந்தேனில்லை. ஆதலால், இதற்குள் சில தேசங்களுக்குச் சென்று அவ்விடங்களில் நடக்கும் அதிசயங்களை நன்கறிந்து, பிறகு தங்களின் மனதின் நோக்கத்தை பூர்த்திக்கின்றேன், தாங்கள் இவ்வடியேன் விஷயத்தில் ஏதேனும் மறுப்புகூறாது விடை தந்து அனுப்புவீர்.

விசித்-வ-ம் :—மந்திரி! புத்திரன் உரைத்ததை கவனித்தனையா?

மந்-வ-ம் :—உண்மைதான், தங்களின் புத்திரர் உரைக்கும் விஷயமும் ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதுதான், ஏனெனில் ஒன்றுமறியாத ஒருவர், ஒரு ராஜ்யத்திற்கு அரசனுகுவாரேல் அன்னவர் உலகானுபவ விஷயங்களனைத்தும் எப்படி அறிவது, அதற்காக தான் தங்களின் மைந்தர் இவ்விதம் புகல்கின்றூர்.

விசித்-வ-ம் :—மந்திரி! நீ புகல்வதும் உண்மையே! (அதிரூபனை நோக்கி) மைந்தா நீ கூறியபடியே உன்னை தேசவலஞ் செய்துவர அனுப்புதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆதலின் நீ அதிவிரைவில் நமது நாட்டில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற அக்காளிகாதேவியின் திவ்விய க்ஷேத்திரத்திற்கு சென்று அவ்வம்மனை பணிந்து அன்னையின் திருவருளை பெற்று சென்று வருவாய்.

அதி-வ-ம் :—அப்படியே பிதா! [அதிரூபன் போகிருன்.]

சீன் :—2.] [இடம் :—காளி கோவில்.

அதிரூபன் கோவிலருகில் நின்று அம்மனை வணங்குகிருன்.

மயில் வாகனமேரி என்ற மெட்டு.

பல்லவி.

பணிந்தேன் குண நிதியே பகவதியே (ப)

அநுபல்லவி.

பாது கார்க்க ஏது வாது . (ப)

மதுடம்.

பாராய் இதுததி வாராய் என துதி (ப)

சரணங்கள்.

கனிவுடன் யானே கழல் பணிந்தேனே
கங்காளன் மகிழ்ந்திடும் சிங்கவாகனி யுன்னை (ப)

மகுட சம்மாரி மதிமுக தீரி
மலையத்துவஜனிட குலக்கொழுந்தே ஓய்யாரி (ப)

ஜெய திரி சூலி ஜெகம்புகழ் காளி
செம்படவர் குலத்தில் அன்பாய் ஜெனித்த பாலி ப)

அண்டினேன் தாயே ஆதரிப்பாயே
அன்பன் தியாகராஜனின் அருந்தமிழ்க் கருள் நீயே (ப)

அதிரூபன் காளிகாதேவியை துதிக்க காளிகாதேவி பிரசன்னமாகி அதிரூபனிடம் மந்திரவாளைத் தருகிருள் அதைப்பெற்று செல்கிருன்.

சீன்:—3] [இடம்:—நந்தவனம்.

அதிரூபன் வருகிருன்.

அதி-வ-ம்:—நாம் இவ்வளவு தூரம் கால்நடையாகவே நடந்து வந்தமையால், ஏதோ ஒருவித தேக அயற்சியை யுண்டாக்குகின்றது. தவிரவும், இப்போது நாமிருக்கும் இவ்விடமோ ஓர் நந்தவனம் போலவும் தோற்றுகின்றது. ஆதலால், நாம் இவ்விடத்திலே சற்று நேரம் அமர்ந்து சிரமப்பரிகாரஞ் செய்துக்கொண்டு செல்லலாம். (வனத்தை சுற்றிப்பார்த்து) ஹா! இவ்வனத்தின் வளப்பங்களை என்னவென்றெடுத்துரைப்பது? ஆஹா!

காக்ஷிகண் காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி.

சிங்கார சோலையே
சித்தம் பிரமிக்கும் நிலையே (சி)

அனுபல்லவி.

மங்காரு மிவ்வனத்தின் மாக்ஷிமிகும் சேதியே

சரணங்கள்.

சித்திரக்கல் மண்டபமும் சிகரங்கள் துலங்குதே
சித்தர்கள் வசிக்கும் ரத்ன மேடையும் விளங்குதே
சுற்றிலும் நீரோடையது சூழ்ந்திதோ இலங்குதே
சூக்ஷமுடன் காக்ஷியாக மாக்ஷிமை விளங்கிடுதே (சி)

சண்பகமும் முல்லைரோஜா ஜாதிமல்லி வாசமே
சந்தண மரத்தின் வாடை காதவழி வீசுமே
புன்னையுடன் பாரிஜாதம் புகழ் மிகுந்த நேசமே
புட்பவன மிதைபோல கண்டதில்லை யுத்தேசமே (சி)

வனமதிலே புள்ளிமான்கள் வாய்மையாக ஓடுதே
வாட்டமாய் மரங்களிலே மந்திகளும் ஜாடுதே
குணமுடன் குயிலினங்கள் குதூஹலமாய் பாடுதே
கும்பல்கும்ப லாகமயில் சிறகை விரித்தாடுதே (சி)

அதி-வ-ம் :—ஆஹா! இவ்வனமானது யார் வசிக்கும் வனமாக இருக்கலாம்? அதோ, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ஷண்பகம், பாரிஜாதம், இதுபோன்ற அனேக வாசமிகுந்த புஷ்பச்செடிகளின் வளமையும், ஒருபுறத்தில் மாணிக்க மண்டபத்தின் மாக்ஷியும், அருகிலிருக்கும் மேடையின் சிருங்காரமும் அதைச் சுற்றிலுமிருக்கும் நீரோடையின் நிகழ்ச்சியும், ஹா! அதுஎன்ன? ஏதோ ஒரு வானரமானது ஒரு மாத்திலிருந்து மற்றொரு மாத்திற்கு தொத்தி எதையோ பிடிப்பதற்குபோகும் நோக்கம் போல் ஓடுகின்றது. தவிரவும் பக்ஷிகள் கீதம் பாட, பரிமளிக்கும் இப்புட்ப வாசத்திற்கும் இவ்விடத்திலேயே சிலநாள் இருந்து போகலாமென என் மனது நாடுகின்றது. ஆயினும், நாம் இவ்வளவு தூரம் நடந்து வந்தமையால் களையதிரிகக்கின்றது. அதின் பொருட்டு சற்றுநேரம் இம்மேடைமீது சயனிக்கலாம்.

அதிரூபன் மேடைமீது சயனித்திருக்கும் சமயம்
அமராவதி புஷ்பக்குடலையுடன் வருகிருள்.

அம-வ-ம்:—என் தந்தையானவர் எனக்காக ஏற்படுத்திய இந்த நந்தவனத்தின் வளப்பமே வளப்பம். ஆஹா!

கைசே நாலே நாலே என்றமெட்டு.

பல்லவி.

ஏது ஏது இவ்வனம் போலில்லை இப்புவிமீது
இயம்பினேன் தோது பெண்மாது
இதில்துன்ப மேது ஆஹா (ஏ)

அனுபல்லவி.

சாதுக்கள் மகிழும் மேடை சார்ந்த ஓடை ஜோதியே
சந்தனமும் அதின் மணமும் இது தினமும் நீதியே
ஷண்பக முடனே விந்தையா மிது (ஏ)

குயில்கள் பாட மயில்களாட குரங்குகள் மாத்தில் ஜாட
குணமீதே மனவாதே போம் தப்பாதே வனமீதே
குளிர்ந்த தென்றலும் மெலிந்து வீசுதே (ஏ)

அம-வ-ம் :—ஆஹா! இதென்ன இத்தகைய சிங்காரமுடன் அழகிய நந்தவனத்தை நமது தந்தை நமக்கல்லவோ அமைத்துவைத்திருக்கின்ருர். (சற்று திகைத்து) ஹா! இதுவனைத்தும் நமக்கிருந்தும் யாது பயன், பருவகாலத்தை பாழாக்கிக்கொள்ளவல்லவோ அப்பாழும் பிரம்மதேவன் நமது சிரசிலெழுதிவிட்டான். ஆஹா! நாம் மாக்ஷிமை தங்கிய கலிங்கநாட்டதிபனின் மகளாக ஜெனித்து வெகு சிறப்புடன் வளர்ந்துவருங் காலத்தில் எனது அன்னையை

ஐந்தாம் பிராயத்தில் பறிகொடுத்தேன். எனது தந்தை என் பொருட்டு, ஜெகஜண்டி யென்பவளை இரண்டாவது தாரமாக மணந்தார், மணந்தும் அன்னவள் என்னைப் படுத்தும் கொடுமைகளை இன்னதெனச் சொல்லவும் முடியவில்லை. இதை என் தந்தையிடம் உரைக்கலாமென்றாலோ? பிறகு என்ன கெடுதி விளைவிப்பாளோ என்ற சஞ்சலமும் நெஞ்சிற் குடிகொண்டு வருகின்றது. இதெல்லாம் தான் இப்படி யென்றாலோ? அவளது சகோதரனாகிய "கோமாளி" என்பவனொருவனிருக்கின்றான், அவனோ, மகா அகோர ரூப முடையவன். அனேக துற்குணங்களையும் ஆபரணமாக பூண்டவன், அவனுக்கு என்னை விவாகம் செய்துவைப்பதாகவும் கூறிக்கொண் டிருக்கின்றாள். அவனும் சில சமயங்களில் வந்து என்னிடம் கேளிக் கையாக பேசியும் செல்லுகின்றான் அத்தகைய ஈனனை வரிப்ப தைப் பார்க்கிலும் மடிவதே நலமென நினைத்து இதுவரையில் மறுத்து வருகிறேன். எல்லாவற்றிற்கும் சாக்ஷாத் ஜெகதீசனே காத்து ரக்ஷித்தருளவேண்டும். "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" எனும் மூதுரைப்படி யானும் அவரையே நம்பி இதுவரை யில் அவனியில் உயிர் வாழ்கின்றேன் தவிரவும் நாம் வந்து வெகு நேரமானதல்லவா? நமது தந்தையின் பூஜைக்காக மலர் பரிக்க வந்து ஏதேதோ பலவிதமாய் பிதற்றிக்கொண்டு வீண் பொழுதைக் கழிக்கின்றோமே இனியாவது தாமதிக்காமல் புஷ்பங்களைப் பறித் தேகலாம்.

அமராவதி மலர் பறித்துக்கொண்டே அதிரூபனை பார்த்துவிடுதல்.

அம-வ-ம்:—ஆஹா! என்ன இது? நாம் சற்று நேரத்திற்கு முன் புலம்பியதற்கு மாறாக இப்போது இவ்விடத்தில் இத்திவ்ய தெரிசனம் கிடைத்ததே, ஹா! இப்போது நாமெங்கே யிருக்கி றோம்? இது என்ன கனவா? அல்லது நாம் நினைத்திருந்த நினைவா? இல்லை ஒருவேளை சதாகாலமும் நாம் தொழுதேற்றும் அக் கரு ணாகரக் கடவுளின் கருணாமிர்தத் தோற்றமோ? ஆஹா!

கலித்துறை.

சேர்ந்தாலும் இத்தகைய புருடனைதா னல்லவோ
சிறப்புடன் சேரவேண்டும்
கூர்ந்தாலும் இவனுடனே கொக்கோக லீலைகளை
செய்துகளி கூரவேண்டும்
தேர்ந்தாலும் இல்லற வாழ்க்கைதனில் இப்புருட
னுடனிருந்து தேரவேண்டும்
சார்ந்தாலும் இவனால் தான் ஈசனிட
பத மதையே சாரலாமே.

அம-வ-ம்:—பேஷ்! என்ன ரூபலாவண்யம்?

ஆஹா ஜோரான மார சிங்கார என்ற மெட்டு.

பல்லவி.

இந்த—பார்மீதிவன் போல யாரையீடு சொல்ல
லாகுமோதான் பலே ஜோர் ஜோர் ஜோர் (இ)

அனுபல்லவி.

இவன்—சீருற்றிடும் ப்ரம்ம தேவனுரைப்படி
சேர எனைவந்து சோர்ந்து படுத்தானோ
பேஷ் பேஷ் பேஷ் (இ)

சரணம்.

ஆஹா—இந்திரன் தானோ திருச்—செந்தூரன் தானோ
ரதி—சுந்திரன் தானோ நல்ல—சந்திரன் தானோ
வந்திழையின் துயர் ஓட்டிடுவான் சுகங்
காட்டிடுவான் வெகு
சாந்தமுடன் லீலை பூட்டிடுவான் உறவு
கூட்டிடுவான் எந்தன்
ஏகபோக சையோக னிவனே இவன்
ஏகாந்த மான எழில் மாரனே
தோகை யெனைச்சேர ஜோடி யிவனே
தோதா மிவனுடைய லேடியும் நானே
தொட்டாலும் கரம் பட்டாலும் சேர்ந்
திட்டாலும் உயிர் விட்டாலும்
துயரம் ஏது ஏது
துரையிவன் சாது சாது
அயனரு ளீது யீது
அணைந்திட இவனே தோது
அன்பன் தியாக ராஜன் செந்தமிழ் போல் புவிமீது
ஆ ஹா ஹா ஓ ஹோ ஹோ பலே சபாஷ்—இந்த (பா)

அம-வ-ம்:—சந்தனம் புனுகுடன் ஜவ்வாது வாசம் பரிமளிக்க, அயர்ந்து நித்திரைபுரியும் சொகுசும், சூரிய ஜோதியையும் வெட்கச்செய்யும் ஜோபிதமுடைய அழகும் பெற்றுள்ள இக்காதலர் இவ்விடத்தில் ஏன் வந்து சயனித்தார். ஒருவேளை என்பொருட்டு தான் சயனித்திருக்கின்றாரோ? இல்லை யான் படும் துயருக்கிரங்கி அவ்வீசன் இவரை இவ்விடத்தில் அனுக்ரஹித்தனரோ? ஆஹா! யான்பெற்ற பாக்கியமே பாக்கியம், நாமே வலிய இவரை எழுப்பிச் சங்கதியறியலாமா? வேண்டாம், அதுதான் தகாதகாரியம். (அருகிலமருகிறாள்) காதலா! ஏதோ ஒரு முத்தம் தாருங்கள்? (முத்தமிடு

கிருள்) ஐயோ! இது என்ன? இன்னும் இவர் விழித்துக்கொள்ள வில்லையே? ஒருவேளை விழித்துக்கொண்டால் நம்மீது சீறி விழுந்து வைது அனுப்புவாரோ? ஆஹா! நாம் என்ன காரியம் செய்தோம் "ஆசை வெட்கமறியாது" எனும் மூதுரைப்படி துராக்ருதமாய் இவரைத்தொட்டு முத்தமிட்டோமே? ஒருவேளை இதையெல்லாம் விழித்துக்கொண்டு பார்த்திருந்தும் வெட்கமுற்று இருக்கின்ருரோ? ஆனாலும் குற்றமில்லை, நமக்கும் நேரமாகின்றது, நாம் வந்துபோன தற்கு அடையாளமாகவும், காந்தர்வமணம் செய்துக்கொண்டதற்கு ஒப்பாகவும், இதோ என் கரத்திலிருக்கும் கணையாழியை மாற்றிக் கொள்கிறேன். ஆம்! அதுதான் சரி.

அமராவதி கணையாழியை மாற்றிக்கொண்டு செல்கிருள்.

பின்பு அதிரூபன் விழித்து எழுந்து

அதி-வ-ம்:—ஹா! நாம் சற்று நேரத்திற்குமுன் கண்முன்பாகக் கண்ட பெண்மணி! யாராயிருக்கலாம். ஒருவேளை சொற்பனம் கண்டிருப்போமோ? இல்லை! இல்லை! உண்மையில் அவள் ஒரு பெண்மணியே, ஆஹா! எத்தகைய ஜோதி சொரூபத்துடன் எந்த னின் எதிரினில் நின்ருள்? அருகிலும் அமர்ந்தாள், முத்தமிட்டாள், இத்தகைய மாதற்கரசியை யல்லவோ மனைவியாக அடைந்து இல் லற தர்மத்தை இழுக்கின்றி நடத்தல் வேண்டும் ஆஹா!

தயவில்லாத தென்ன வஞ்சம் என்ற மெட்டு.

பல்லவி.

காமரதியவளைக் கண்டேன் இங்கே
காதலதிகங் கொண்டேன் நான் (கா)

அனுபல்லவி.

பூமி புகழமிர்த முண்டேன் அந்த
பூவையால் வெகு ஆவலாகியே
போக மனம் நோகு தினியென் செய்வேன் (கா)

சரணம்.

கலந்து சுகித்திடவே கனமிகும் மாது
கண்டதில்லை யவள்போல் காசினி மீது
குலுங்கும் கும்பமதனின் சீரு
கோரியே தியாக ராஜனுரையினுல்
கோகி லம்போல் மோகித் தருகில் நின்ருள் (கா)

அதி-வ-ம்:—இப்பிரபஞ்சத்தினிடமாக அந்நான்முகனுல் சிருஷ்டிக்கப்பெற்ற பத்மினி, சித்தினி, அத்தினி, சங்கினி எனும் நால்வகைப் பிறப்பில் எனதெதிர்வந்த பெண்ணரசியானவள், இல்

வாழ்க்கையில் பத்மினிபோலும், இன்பவாழ்க்கையில் சித்தினி போலும், தானே வலிய எனையணைத்து முத்தமிட்டதைப் பார்க்கில் அத்தினிபோலும் தோன்றினளே ? ஐயோ! என் மனதைக் கலைத்து விட்டு அவளது கணையாழியையும் மாற்றி அக்கருங்குழல் சென்று விட்டனளே, காமவாளி பாய்ந்து என் கருத்தைக் குலைக்கின்றதே ஆ! ஜெகதீசா! அம்மாதை எங்கேயாகிலும் தேடி மணர்ந்துக் கொள்ளவேண்டியதே அவசியமாதலால் இதோ செல்கிறேன்.

[அதிரூபன் போகிறன்.]

சீன் :—4] [இடம் :—அமராவதி அந்தப்புரம்.

அமராவதி நந்தவனத்தில் கண்ட அதிரூபனை நினைந்து வருந்திக்கோண் டிருக்கும் சமயம் கோமாளி வருகிறன். சேவகன் அமராவதி யின் அரண்மனையருகில் காவல் புரிந்திருக்கின்றன்.

கோமாளி வருகிற பார்ஸி நோட்.

பல்லவி.

அலக்—சலாமலேக்கும் சலாமலேக்கும்
சபையோ ரனைவருக்கும் (ச)

அனுபல்லவி.

அலோ குட்மானிங் அன்பன் கோமாளி
ஆடியே வந்தேன் அஹ் ஹஹ் ஹா—அலக் (ச)

சரணம்.

பலே தமாஷாய் பல்டி உடானும்
பதமாய் போட்டேனே—எனை
பார்த்தவர் மயங்கிட கோணையாய் நாமம்
பட்டையாய் போட்டேனே
பின்னல் ஜடையும் கண்ணிலே மையும்
உன்னத பொட்டழகும்—கையில்
பிடித்தேன் குடை படித்தேன் தியாக
ராஜனின் பாடலையும்—அலக் (ச)

கோமாளி-வ-ம் :—அடே சேவக்!

சேவகன்-வ-ம் :—எனய்யா ?

கோ-வ-ம் :—அடே! நீ அதி சீக்கிரமாக அமராவதியிடத்தில் சென்று கோமாளி மாமா வந்திருப்பதாக தெரிவி.

சே-வ-ம் ;—என்ன ? கோமாரியா ? அது ஏன் இங்கே வந்தது ? மாட்டு கொட்டகைக் கல்லவோ போகவேண்டும்?

கோ-வ-ம் :—சட் மடையா! கோமாரியல்ல, கோமாளி.

சே-வ-ம் :—என்ன? என்ன? ஒவ்வொரு எழுத்தாக சொல்லுங்கள்?

கோ-வ-ம் ,—கோ மா ளி.

சே-வ-ம் :—கோமாளியா? சரிதான், இதோ போய் தெரிவித்து வருகிறேன்.

[சேவகன் அமராவதியிடம் வருகிருன்.]

சே-வ-ம்:—அம்மணி! கோமாரி வந்திருக்கிறது.

அம-வ-ம்:—என்னடா இது! கோமாரி ஏன் இங்கு வரப்போகிறது? போய் சரியாக பெயரைக் கேட்டுவா?

(சேவகன் சென்று மறுபடியும் அமராவதியிடம் வருகிருன்)

சேவ-வ-ம்:—அம்மணி! தங்களின் கோமாளி மாமா! வந்திருக்கின்ருர்.

அம-வ-ம்:—அட சனியனே! ஏன் வந்தான் அந்தபீடை? சரி வரச்சொல்.

(சேவகன் கோமாளியிடம் வருகிருன்.)

சேவ-வ-ம்:—ஐயா! உத்திரவுதான்! போகலாம்.

கோமாளி அமராவதியருகில் வருகிருன்.

ஸ்ரீமான். ஆர். நடராஜாச்சாரி பாடியது.

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

பல்லவி.

நான் கண்டே ஞனந்தம் நான்
கொண்டேன் பெண்மணி (க)

அனுபல்லவி.

நான் கண்டேஞனந்தம் கொண்டேனே
பெண்மணீ கண்மணீ பெண்மணீ (க)
அமராவதியே அழகுள்ள மணியே
நடராஜ மணியே நவமணியே
யாருந் தீண்டா மணியே (க)

கோ-வ-ம்:—ஆஹா! என்ன செய்வாளோ? அந்த கஞ்சாமி தம்பி சிஞ்சாமி, துரைசாமி, ஏழுமலேச்சாமி, ராமசாமி, வெங்கடச்சாமி, எல்லா சாமிகளும் சேர்ந்து என்னே கலியாண கோலத்துடன், சடையைப்போட்டு, மையைப்போட்டு, சாப்பாட்டைப்போட்டு, இலேயைப்போட்டு, நெய்யைப்போட்டு, பருப்பைப்போட்டு, குழம்பைப்போட்டு, தப்பளம்போட்டு, அப்பளம்போட்டு, கையைப்

போட்டு, வாரிப்போட்டு, வயித்திலே போட்டு, டிங்கு டிமாய்ந்து வந்திருக்கிறேனிப்போ, என்னை மதிப்பாளா? என்னைக் கோருவாளா? என்னைக் கலியாணஞ் செய்துக்கொள்ளுவாளா? அட பழையசோத்து பரமசிவமே! அடே! கோவிந்தா! உன் நெஞ்சியிலே தேள்கொட்ட! ஐயோ! இந்த விஸ்கோத்துவாயனை பார்த்தவுடனே, பலபட்டை சுப்பா, பனங்கொட்டைத் தலையா, கீரைக் கடைந்த வாயா, அகப்பை வாயா என்று சொல்லுவாளா? நல்லது என் சிநேகிதர்களெல்லாம் கூடி என்னை யனுப்பி யிருக்கின்றார்கள், பார்க்கலாம் ஒரு கை, அகப்பட்டால் ஆச்சுது, இல்லாவிட்டால் பழையபடிபோய் அவர்களோடு சேர்ந்துக்கொள்ளலாம்.

அமராவதியின் அருகில் சென்று

கோமாளி-வ-ம்:—அமராவதி!

அம-வ-ம்:—என்ன மாமா? இவ்வளவு அவசரத்துடன் இங்கு வந்தது?

கோ-வ-ம்:—என்ன அவசரமா? கல்யாணம்! கல்யாணம்!

அம-வ-ம்:—யாருக்கு மாமா?

கோ-வ-ம்:—எனக்கு தான் கலியாணம் அமராவதி!

அம-வ-ம்:—சந்தோஷம்! எல்லாம் முடிவாகி விட்டதா?

கோ-வ-ம்,—ஆ ஹா! அதற்கென்ன தடையா! கேள் சொல்லி வருகிறேன்.

கோமாளி தரு.

அமராவதி உந்தனுக்கு அழகான கல்யாணமாம்
அழகான கல்யாணமாம் ஆனைமேலே ஊர்கோலமாம் (அ)

அம-வ-ம்:—எந்தனுக்கா மாமா!

கோ-வ-ம்:—இல்லே! இல்லே! வாய் பிரண்டு சொல்லிவிட்டேன் மன்னித்துக்கொள்.

அம-வ-ம்:—பிறகு தெரிவியுங்கள்.

கோ-வ-ம்:—ஆமாம்! எத்தனைநாள் கலியாணம் தெரியுமா? தெரிவிக்கிறேன் கேள்.

ஷை பாட்டுத் தொடர்.

அஞ்சிநாள் கலியாணமாம்
ஆனைமேலே ஊர்கோலமாம்
ஆனைமேலே ஊர்கோலமாம்
ஆயிரரூபாய் வாழைமரம் (அ)

பாக்கு பணம் வைத்தாச்சு
பந்தலெல்லாம் போட்டாச்சு
பந்தலெல்லாம் போட்டாச்சு
பாலிகை முளைத்து போச்சு (அ)

தங்கமெல்லாம் வாங்கியாச்சு
தாலிசெய்ய கொடுத்தாச்சு
தாலிசெய்ய கொடுத்தாச்சு
பீலிசெய்து முடித்தாச்சு (அ)

கோ-வ-ம்:—என் கலியாண விருந்தில் பலகார வகைகள் என்ன தெரியுமா ?

அம-வ-ம்:—என்னவகை பலகாரங்கள் மாமா ?

கோ-வ-ம்:—அப்படி கேள் சொல்லுகிறேன்.

ஷை பாட்டுத் தோடர்.

மிட்டாயி பூந்தி லட்டு
மிருதுவான ஜிலேபி தட்டு
மிருதுவான ஜிலேபி தட்டு
முருக்கு வடை அல்வா ஒப்பிட்டு (அ)

ஓமபொடி காராபூந்தி
உயர்ந்ததொரு சூரிய காந்தி
சோமாசு ரவை பூந்தி
சாப்பிட்டாலது தேக சாந்தி (அ)

கோ-வ-ம்:—அமராவதி இந்த வேலை முடிந்ததும் சாப்பிட்டவருக்கு தாம்பூலம் கொடுப்பதற்காக இந்த ஊர் வெற்றிலை பாக்கு சரியானதல்லவென்று என்னக்காள் எங்கே இருந்து வெற்றிலைபாக்கு தருவித்திருக்கிறுள் தெரியுமா ?

அம-வ-ம் :—எங்கே யிருந்து மாமா !

ஷை பாட்டுத் தோடர்.

திண்டுக்கல் வெற்றிலையாம்
திரிபுவனம் சுருள் பாக்காம்
இத்தனை வைபவமும்
இரண்டு நாளில் நடக்கும் (அ)

கோ-வ-ம் :—இவர்களெல்லாம் சாப்பிட்டு போனவுடனே சாயங்காலம் 5-மணிக்குமேல் ஒரு கச்சேரி இருக்கிறது அது என்ன கச்சேரி தெரியுமா ?

ஷை பாட்டுத் தொடர்.

பொன்னுசாமி	நாகசுரம்
புல்பியாண்டு	சின்னமேளம்
புல்பியாண்டு	சின்னமேளம்
புதுச்சேரி	நாகரத்னம் (அ)
புஷ்பவனம்	பூச்சையங்கார்
புகழ்பெற்ற	அழகநம்பி
புகழ்பெற்ற	அழகநம்பி
புண்ணிய	தக்ஷிணாமூர்த்தி (அ)

அம-வ-ம் :—இவர்களெல்லாம் வந்து என்ன பாடுவார்கள் தெரியுமா?

ஷை பாட்டுத் தொடர்.

கல்யாணி	காம்போதி
கானடா	ராகமூர்த்தி
தர்பார்	பூபாள முடன்
தனியாய்	உசேனி ராகம் (அ)

கோ-வ-ம் :—அமராவதி! இப்படிப்பட்ட இராகங்களை யெல்லாம் பாடி மணி 10-க்கெல்லாம் கச்சேரியை கலைத்துவிட்டு போய் விடுவார்கள். ஆம்! அதற்குப் பின்னால் என்ன வேடிக்கை தெரியுமா?

ஷை பாட்டுத் தொடர்.

சர்க்கஸ்ஸு	கம்பெனியும்
சரியான	டிராமாக்களும்
பாலிவாலா	பார்ஸி தியேட்டர்
பலமான	இந்திர சபா (அ)

கோ-வ-ம் :—இதைப்போலவே ஐந்துநாளைக்கும் நடக்கும். அமராவதி கல்யாணத்துக்கு நீ வரமாட்டே?

அம-வ-ம் :—நான் வராமல்கூட போவேனு மாமா! ஆமாம் பெண் எந்த ஊரில் பார்த்தீர்கள் மாமா?

கோ-வ-ம் :—பெண்ணின் ஊரா? சொல்கிறேன் கேள்! அதாவது, காபூல்பூருக்கு பின்னாலே தாபுல்பூர், தாபுல்பூருக்கு பின்னாலே டபுல்பூர், டபுல்பூருக்கு பின்னாலே ஜப்புல்பூர், ஜப்புல் பூருக்கும் முன்னாலே லப்பர்பூர்லே.

அம-வ-ம் :—என்ன மாமா! தாங்கள் ஊர்களின் பெயரெ லாம் இவ்வளவு வேடிக்கையாக இருக்கிறதே? சரிதான் பெண் அழைத்து வந்துவிட்டீரா?

கோவ-வ-ம் :—இல்லே! இல்லே! இப்போதுதான் டார்சல் செய்துவிட்டு இங்கே வந்தேன். அதுவும் நடுவழியில் தான் வரும்.

அம-வ-ம் :—அதெப்படி மாமா! பெண்ணே பார்சல் செய்தீர்கள்? ஏன் யாராவது ஒருவர் அழைத்துக்கொண்டு வரப்படாதா?

கோமா-வ-ம்:—இல்லே! அமராவதி! அந்த பெண்ணுக்கு வேரேயாரும் பந்துக்களில்லே, அப்படி இல்லாதவளே நான் அழைத்துவந்தபோதிலும், அந்த பெண்ணே, அழகிலும், குணத்திலும், மற்றெல்லா விஷயத்திலும் உன்னேபோலவே இருக்கிறாள். அப்படிக் கொற்றவளே யாராவது ஒருவன் பார்த்து அவள்மீது கண்ணைப் போட்டால் உடனே அவள் அவன்மீது கைபோட்டு வேறே கப்பலி லேறி போய்விடப்போகிறார்களென்று, ஒரு பெட்டிச் செய்து, அதில் அந்த பெண்ணேவைத்து, அந்த பெட்டிக்கு ஒரு சிறிய துவாரம் வைத்து, என்னுடைய ரப்பர் ஸ்டாம்பை குத்தி, அட்ரஸ் போட்டு, போஸ்டு பார்சலில் அனுப்பிவிட்டு வந்திருக்கிறேன். அதிருக்கட்டும் அமராவதி! நாம் முன்பு ஓரே பள்ளிக்கூடத்திலே படிச்சிகிட்டு இருந்தோமே அப்போ நம்ப தேவாரம், திருத்தாண்டகம் எல்லாம் படிக்கலே?

அம-வ-ம்:—என்ன! திருத்தாண்டகம் மாமா?

ஆர். நடராஜாச்சாரி பாடியது.

திருத்தாண்டகம்.

இராகம்—கமாஸ்.

அரியானே அந்தணர்கள் சிந்தை யானே
பார்த்தசாரதி கோயில் யானே
மைசூர் மகாராஜா பட்டத்து யானே
திருவாரூர் தியாகராஜ சுவாமி கோவில் யானே
நைஜம் தேசத்து நவாப்பு யானே
உன்னானே என்னானே உங்கானே எங்கானே
உங்கொப்பரானே நான்
சொல்வதெல்லாம் நிஜந்தானே
என்னப்பனே சம்போ சங்கரா
மசாலவடை கோவிந்தா
பலபட்டை சுப்பா
சங்கரனே சங்கரனே சங்கரனே
உனக்கு சக்கரை பொங்கல் பொங்குரனே
அவளும் இவளும் தின்றிடவே
எனக்கு இல்லேயென் றேங்கிடவே
சங்கரனே சம்போ கங்காதரனே
ாதாரமண கோவிந்தா கோவிந்தா (அ)

அமு-வ-ம்:—பேஷ்! என்ன மாமா? தாங்கள் சொல்வதெல்லாம் வேடிக்கையாகவே இருக்கிறதே?

கோமா-வ-ம்:—அமராவதி! இதுதானு? இப்போது நான் ஒரு ராமாயணம் படிக்க கற்றுக்கொண்டிருக்கிறேனே, அதாவது என்ன ராமாயணம் தெரியுமா? கம்பராமாயணத்துக்கு எதிரியான வம்ப ராமாயணம்.

அமு-வ-ம்:—எதோ அதை கொஞ்சம் சொல்லுங்கள் மாமா! பார்க்கலாம்.

கோமா-வ-ம்:—அதாவது சொல்லுகிறேன் கேள்.

பாட்டு.

புடுங்கிட்டானும் புடுங்கிட்டானும்
வேரோடே புடுங்கிட்டானும் (பு)

அமு-வ-ம்:—எதை மாமா!

கோமா-வ-ம்:—சொல்லுகிறேன் கேள். அகோதெப்படியென்றுல் இந்தப் பிரகாரமாக, ராமமூர்த்தியின் பத்தினியாகிய பாஞ்சாலியை ராவணன் எடுத்துக்கொண்டு போய்விட்டபோது, அந்த ராவணனுடன் சண்டைசெய்த ராமரும் இலக்ஷ்மணரும் இந்திரஜித்தின் கணையினுல் மூர்ச்சையாகி விழும்போது ஆஞ்சநேயர் இமையகிரி பருவதத்திற்கருகில் சஞ்சீவிமலை இருப்பதாகவும் அதனுல் இராமலக்ஷ்மணுளை எழுப்பலாமென்றும் நினைந்து அந்த சஞ்சீவிமலை யருகில் வந்து நின்று

பாட்டு.

புடுங்கிட்டானும் புடுங்கிட்டானும்
வேரோடே புடுங்கிட்டானும் (பு)

அமு-வ-ம் :— அப்பால் மாமா?

கோமா-வ-ம் :—அமராவதி! வில்லிபாரதத்திற்கு பதிலாக இப்போது ஒரு முனிவர் புள்ளி பாரதம் எழுதி இருக்கிருரே அது உனக்கு தெரியுமா?

பாட்டு.

உறிஞ்சிட்டானும் உறிஞ்சிட்டானும்
அடியோடே உறிஞ்சிட்டானும் (உ

உமு-வ-ம் :—எதை மாமா!

கோ-வ ம் :—அவசரப்படாதே! சொல்லுகிறேன் கே
அகோதெப்படியென்றுல் இந்தப்பிரகாரமாக பாண்டு ராஜனின்

திரர்களாகிய, தருமர், பீமன், அர்ச்சுனன், நகுல சகாதேவன் இவர்களும் திருதராட்டிரன் குமாரர்களாகிய துரியோதனுதியர் தொண்ணூற்றொன்பது பேரும், சூதாடியதில் தருமர் தனது ராஜ்யம் சேனை சைன்யங்கள் முதலியதைத் தோற்றும், பிறகு தனது பத்தினியாகிய சீதையையும் தோற்று விட்டார், இதைக்கண்டதும் துரியோதனன் தனது தம்பியாகிய அரிச்சந்திரனை யழைத்து, சீதையை சபைக்கு கொண்டு வரச்சொல்ல, உடனே அரிச்சந்திரன் சீதையின் மயிரைப் பிடித்து சபைக்கு இழுத்து வந்து தன் அண்ணனுடைய உத்திரவு பிரகாரம். அவள் உடுத்திக்கொண்டிருக்கும் படியான சேலையை.

பாட்டு.

உறிஞ்சிட்டானும் உறிஞ்சிட்டானும்
அடியோடே உறிஞ்சிட்டானும் (உ)

வசனம் :—பிறகு துரியோதனுதியர் தொண்ணூற்றொன்பது பேரும் 12-வருஷம் வனவாசம் சென்றார்கள் அப்போது ஒருவனத்திலே, ஒருநாள் தினத்திலே துரியோதனின் கடைசி தம்பியாகிய மயில்ராவணன்.

பாட்டு.

ஆட்டிட்டானும் ஆட்டிட்டானும்
அப்படியே ஆட்டிட்டானும் (ஆ)

கோ-வ-ம் :—அதேதெப்படி யென்றால், இந்தப்பிரகாரமாக மயில்ராவணனென்பவன் பாரிஜாத புஷ்பம் எடுத்துவர ஒரு வனத்திற்குள் செல்லும்போது வழியில் காவலாக இருந்த ஆஞ்சநேயர் உதவியால் அவர் வாலிலே இந்த மயில்ராவணனை கட்டி வனத்தினுள்ளே விட, உடனே மயில்ராவணன் கட்டையவிழ்த்துக்கொண்டு, ஆஞ்சநேயரை வாலை எடுத்துக்கொள்ளும்படியாக அந்த வாலை பிடித்து மயில்ராவணனுகப்பட்டவன்

பாட்டு

ஆட்டிட்டானும் ஆட்டிட்டானும்
அனுமார் வாலை ஆட்டிட்டானும் (ஆ)

கோமா-வ-ம் —ஆமாம்! அமராவதி இன்னேரம் பெண்ணும் ந்திருப்பாள் வாயேன் அப்பெண்ணை பார்த்துவிட்டு வருவாய்.

அம-வ-ம் :—என்றைக்கு மாமா கலியாணம்?

கோ.வ-ம் :—கலியாணமா? தெரிவிக்கிறேன் கேள்!

R. நடராஜாச்சாரி பாடியது.

விருத்தம்.

இராகம்—மோகனம்.

ஆண்டாண்டு பன்னிரெண்டாண்டு எம்மக்களாண்டு
என்சினேகிதர்களாண்டு, கஞ்சாமி தம்பி சிஞ்சாமி
ராமசாமி துரைசாமி வெங்கடச்சாமி
ஏழுமலைச்சாமி இந்தச்சாமி யாண்டு.

சென்னையைச் சேர்ந்ததொரு
இராயபுர ஸ்தலமாம்
மன்னார்சாமி கோவில்
மதன்செய்கியதின் மகிமையாம்
கௌரி இந்து விநோத சபையாம்
அதில் கலந்த பிள்ளையாம்
சந்ததம் எந்தன்குரு
வைகுண்ட வாத்தியார் சொல்லும் மொழியாம்
ஆங்கிலேய மன்னரால்
அஞ்சாநெம்பர் பரிசுபெற்ற
ஜெகமெங்கும் புகழும்
கள்ள ஆர் நடராஜனை
ஆசீர்வதிப்பீரே.

கோ-வ-ம் :—அமராவதி! அந்த பெண்கூட அதோ வந்திருக்கிறாள் பார்த்தனையா ?

அம-வ-ம் :—எதோ மாமா ?

கோ-வ-ம் :—இதோபார் அமராவதி !

(அமராவதியின் அருகில் நெருங்கி.)

கண்டியில்மேவும் நல்ல என்ற மெட்டு

மாமனும் யானிருக்க மச்சினிகீ யிருக்க
மாங்கல்யம் யாரைத்தரிக்க
மணந்து சுகிக்க
மயலைத் தணிக்க—எந்தன்
மாதே அமராவதி வாதே செய்யாதே இதில்
வருந்தி மனது கொதிக்க (மா)

சாந்து ஜவ்வாதழகி நேர்ந்த கழுத்தழகி
சந்தோஷமாக முத்தமே
தருவாய் நித்தமே
தாளேன் யான் பித்தமே—உன்னை

சாஷ்டாங்க மாகவல்லோ சரணமெனப் பணிந்தேன்
சதிசெய்வதேனோ சித்தமே (மா)

உன்னை கலியாணம் செய்ய ஊரார்கள் ஒன்றுகூடி
உடுத்தியனுப்பி னோோடி
உண்மையி தானடி
உறுதி வையடி—உயிர்
விட்டாலும் தோஷமில்லை கட்டிலின் மீதுகொஞ்சம்
திட்டமாய் கட்டிச்சேரடி (மா)

ஆச்சாரி பரம்பரையில் அவதரித்திட்ட சிங்கம்
அன்பனும் தியாகராஜன்
அரும்பர காசன்
அறிவித்தேன் நேசன்—தினம்
ஆறுமுகனருளால் அரும்புகழ் சரபக்கவி
அகிலம்புகழ் விஸ்வாசன் (மா)

அ-ம-வ-ம் :—பேஷ்! நியாயம் நன்றாயிருக்கின்றது? மாமா! வேண்டாம், இனி இங்கிருக்கில் தங்களின் மரியாதைக்கு பங்க மேற்படும் தயவு செய்து போய்வாருங்கள்.

கோமா வ-ம் :—அமராவதி! உன்னால் எனக்கு என்ன பங்க மேற்பட்டபோதிலும் சம்மதமே. ஆனால் உன்னை விட்டுப்போக மாத்திரம் சம்மதிக்கமாட்டேன். ஆதலால்,

R. நடராஜாச்சாரி பாடியது.

ஆண் மாமயிலே மையலானேன் மருவவாடி மாரன்
வாதைத்தாள எந்தனாலே வசமல்லடி (மா)

பெண் பாவி—ஏனோஎந்தன் மீதுவீணாய் மோகங்கொண்டாய்
ஏலா திக்ஷணமே இங்கிருந்தால் மாள்வாயோடா (ஏ)

ஆண் ஏனை ஏசாதே
பெண் எதிர் பேசாதே
ஆண் இருக்கா தாவி
பெண் ஏனடா பாவி
ஆண் அடி உன் சுகமே
பெண் நடவுன் அகமே
ஆண் நாயகி நீயே
பெண் நடடா பேயே
ஆண் வாதுசெய்யாதிந்தவேளை வருவாய்மாதே-வீணாய்
வஞ்சம்வேண்டாம் உந்தனிடதஞ்சமடி (மா)

பெண் நாரயணசாமி சொன்ன நங்கையடா—என்மேல்
தாராளமாய் மோகங் கொள்ள தகுமோ மூடா (ஏ)
ஆண் தாரா குயிலே
பெண் போடா பயலே
ஆண் வெறுக்கா தேனேயே
பெண் இடிப்பே னுனேயே
ஆண் மனம் வாராதே
பெண் எனக் கோருதே
ஆண் மாமயிலே மையலானேன் மருவவாடி (மா)

அம-வ-ம்:—அடே! மடப்பயலே! இதோ பார் உனக்கு என்ன பூஜை தருகிறேன்.

அமராவதி கோமாளியை அடித்து அனுப்புகிருள்.

சீன்:—5.] [இடம்:—ஜெகஜண்டி வீடு.

ஜகஜண்டி அமர்ந்திருக்கும் சமயம் கோமாளி அழுதுக்கொண்டே வருகிருன்.

கோமா-வ-ம்:—எக்கோவ்! [தேம்பித்தேம்பி யழுகிருன்]
ஜகஜண்டி-வ-ம்:—என்னடா! தம்பி, எனழுகிருய்?

கோமாளி ஒப்பாரி.

சதிக்காரக் கொலேக்காரச் சண்டாளனுச்சுதே அடி
என்னைப்பெத்த எக்காடீ என் பிறவி எக்காடீ அந்த
தெற்கத்தி நாட்டிலே தென்னுட்டு சீமையிலே நான்
வளர்த்த பிறவியே நலமுள்ள நடராஜன் பாடவந்தேன் நான்
கலியாண வாசலிலே சுதவேறிப் பார்த்திருக்க நான்
அறியாமலே முந்தானுள் சண்டாளி யடித்தாளே அடி
எக்கா அடி எக்கா நான்

பாட்டு.

என்னத்துக்கோ எண்ணிருந்தேன் என்னே
எமாத்தினுளந்த சக்காளத்தி பாவி பறப்பா
ஓயோ பாழாப்போவா அவ
கொண்டையிலே தீயெரிய
நானே பயித்தியக்காரன் நானே சண்டாளன் அடியவள்
வருத்தம் என்னே எனடித்தாள் ஏனே
சும்மா என்னே குட்டி ஏனே (எ)

கோமா-வ-ம்:—எக்கா! என்னே எப்படி அடித்தாள் தெரியுமா? சொல்கிறேன் கேள்.

கண்ணுட்டி என் கட்டழகி என்ற மெட்டு.

எக்காடி எக்காடி எக்கா மகளே பெத்தவளே
பத்து மாதம் சுமந்திருந்தவளே
பிடிங்கி தொப்புனு போட்டவளே (ஐயோ)
மாட்டடிக்கிறுபோல என்னே போட்டடிச்சாளே பசு
மாட்டை பெரு
மாட்டை யெரு
மாட்டை அவள்
மாட்டடிக்கிறுப்போல என்னே போட்டடிச்சாளே ஐயோ
தொப்பு தொப்பு தொப்பு தொப்புண்ணு (மா)

கோ-வ-ம்:—எக்கா ! நீபோயி அவளே கேட்டா கேளு, இல்லா போனு நானுபோயி கேக்குறேன்.

ஜக-வ-ம்:—அடே! தம்பி! வேண்டாம் நான்போய் கேட்டு பிறகு உன்னே அவள் கலியாணம் செய்துக்கொள்ளும்படிச் செய்கிறேன் அரண்மனேக்குப்போ. (கோமாளி போகிறுன்.)

சீன்:—6.] [இடம்:—அமராவதி அந்தபுறம்.

அம-வ-ம்:—இந்தச் சண்டாளன்! எப்போது பார்த்தபோதிலும் இதே பயித்தியமாக இங்கு வந்து என்னே தொந்திரவு செய்கிறுன். இவனே என்ன செய்வது ?

அமராவதி நித்திரைபோய்விடுகிறுள், ஜகஜண்டி வருகிறுள்.

ஜக-வ-ம்:—இந்தச் சண்டாளியை நாம் சிறுவயதுமுதல் நமது தம்பிக்காகவே அதிக போஷாப்புடன் வளர்த்துவந்தால் அந்த நன்றியை கொஞ்சமேனும் பாராட்டாமல் நமது தம்பி இவ்விடத்திற்கு வந்தால் அடித்து துறத்திஞளே இச்சண்டாளியை இனி உயிருடன் வைக்கப்படாது. (காவலர்களேவிட்டு) அடே! காவலர்களே! இப்பாதகி எழுந்தவுடனே இப்பாலே யருந்துவாள் அருந்தியதும் இவளே யழைத்துக்கொண்டுபோய் காட்டில் விட்டுவிடுங்கள்.

ஜகஜண்டி போகிறுள், கோமாளி வருகிறுன்.

கோ-வ-ம் :—ஆஹா! என்ன இது? இவளின் அழகை என்னவென்றெடுத்துறைப்பது? ஏன் இவள் இப்படி சயனித்திருக்கின்றுள்? (அருகில் சென்று) ஹா! இதென்ன? அருகில் ஒரு பாத்திரத்தில் என்னமோ வைத்திருக்கிறுள். (பாத்திரத்தைக் கையில் எடுத்து) பேஷ்! இப்போதுதான் இந்த அமராவதியின் உள்ளன்பை கவனித்தேன். மேலுக்கு நாணமுற்று நம்மை வெறுத்தனள் போலும். சரி, ஆனல், இந்தப் பாலே நாம் குடித்துவிட்டு பிறகு இந்த அமராவதியை எழுப்பி கலியாணஞ் செய்துக்கொள்ளலாம்.

பாலைக் குடித்துவிடுகிறான் உடனே கோமாளிக்கு மயக்கமதிகரிக்கின்றது.

கோமாளி தரு.

எனக்கொரு விதமாக மயக்கமேலாகுதையோ (எ)
பசிக்குதென்று பால்குடித்தேன் பார்வையை மயக்குதையோ
பாவிஎன்னை இப்படியும் படுமோசமேனோ செய்தாள் (எ)
கால்கள் ரெண்டும் பின்னுதையோ காதையடக்குதையோ
காதகியாள் வஞ்சனையால் கனத்த உயிர் போகுதையோ (எ)

கோமாளி கீழேவிழுந்து மடிகிறான். சேவகன் கண்டு அலரி ஓடிவந்து புலம்புகிறான்.

ஒப்பாரி.

புதுச்சேரி கட்டெரும்பே—என்னை—புடுங்கவந்த சித்தெரும்பே
என் சதிகார தெய்வமே குலைக்கார தெய்வமே—நீ
பிறந்த அழுகென்ன உனக்கு
பெயரிட்ட நேர்த்தியென்ன உன்
சங்கீத பாடலென்ன பாலை
சாப்பிட்ட ஆவலென்ன உன்
பணத்துக்கு நானழுலே உன்
பாட்டுக்கு நானழுலே உன்
குணத்துக்கு நானழுலே மாண்ட
கொடுமைக்கு நானழுலே நீ இந்த
கலியுகத்து கள்ளருக்கு கர்த்தனைபோலவதரித்து இந்த
கோமாளி வேடமிட்டு-இந்த-கொடுமையான பால்குடித்து நீ
சாவது தெரிந்திருந்தா என்குரு
கள்ள நடராஜா ஒருநாழி
முன்னேவந்து பாத்திருப்பேன்

[சேவகன் கோமாளியை தூக்கிக்கொண்டு போகிறான்.]

சீன்:—7.] [இடம்:—காடு.

கோமாளி மடிந்த பிறகு அமராவதி அதிரூபன்மீது காதல்கொண்டு கானக மார்க்கமாக தேடி வருகிறாள். அவ்விடத்தில் திருடன் வருகிறான்.

திருடன் செப்பலோசை தெம்மாங்கு.

பன்னிருகை வேலவனே பரமசிவனார் மகனே உனை
பாடிபணிந்தாடிதினம் பகல் கொள்ளைக் கேகுரேனே வ வ

சொக்குபொடிக் காரனையா சொகுசுள்ள தீரனையா நல்ல
ஜோக்குகாட்டிக ள்ளர்களை சோங்கச்செய்யும் மாரனையா மா மா
ஆச்சாரி பரம்பரையில் எனதுகுரு
அவதரித்த பாலனையா அவர்
அரிய பெரிய வித்வான்களின் ஆசிபெற்ற
அன்பன் வி. ஏ. தியாகராஜனையா ரா ரா
பார்புகழும் சிங்கமையா பகல்கொள்ளைக் காரனையா நான்
பதுங்கிருந்து களவுசெய்யும் பத்தரைமாத்து தங்கமையா த த
எங்கும்புகழ் தீரனையா நான்
எதிரியானகள்ளர்கட்கு எமனையா—உலகில்
பங்கமில்லா சிங்மையா நான்
பி. எஸ். ஷண்முகவேலனையா வே வே
கல்வியிற் சிறந்தவரே கவியெழுதும் பாவணரே உங்கள்
கழலடியைப் பணிந்தேனையா—எனை—காப்பாற்றவேணுமையா
சபையோரே

(கோட்டைகோத்தள மீதிலேறி என்ற மெட்டு.)

வையகம் புகழ கையதனிலே இந்த
ஜெயக்கொடி பிடித்தேன் எதிரிகளை
பொடிபட அடித்தேன் இங்கிருக்கும்
சபையோரை யடுத்தேன் களவு
செய்ய வென்று யானே மெய்யாகவே நல்ல
கத்திரிக்கோ லெடுத்தேன் எந்தன் குரு
கவிதனை படித்தேன் தில்லானு
மெட்டுடனே நடித்தேன் (வை)

கோடை கால இடி மோதி விழுந்திட
சாணிமலைக் குவித்தேன் எந்தன் குல
தேவதையைத் துதித்தேன் கன்னக்கோலை
கோரியே யானெடுத்தேன் பெரிய
மாடிமீது ஏறி ஜாடி விழுகாமல்
கோடு ஒன்று கிழித்தேன் கன்னமதை
நாட்டி சுரங்கம் செய்தேன் உள்புகுந்து
சொத்துகளை எடுத்தேன் (வை)

கத்தரிக்கோலிலே கைக்காரனென்னைப்போல்
காசினியி லுண்டா அப்படி
யாரையேனும் கண்டா அவனை
எந்தனெதிர் கொண்டா நான்
குத்தியே இப்போதே சித்தங் கலங்கிட
கிழிக்கிறேன் ரெண்டா கிழித்து
எறிகுவேன் செண்டா நாட்டுவேன்
ஐந்தா நெம்பர் ஜண்டா (ை)
அமாவாசை கருக்கலிலே
அடைவேனே காட்டை வழிப்போக்கரை
ஆடுவேனே வேட்டை உடனே
அகப்படும் தேட்டை நான்
சமாளித்து தேட்டை போட்டு
கட்டுவேனே மூட்டை அங்கிருந்து
கிளைவழி பாட்டை புகுந்து
வருவேனே வீட்டை (வை)
சரபக்கவி தியாகராஜன்
சங்கீதப் பாட்டு பாடினேன்
ஷண்முகன் சீட்டு இங்கிருக்கும்
சபையோர்கள் கேட்டு வெகு
கரகோஷ மிட்டு கார்த்து யெந்தனை
கருத்துடன் மீட்டு ஆதரிப்பீர்
தில்லானு மெட்டு பாடிடுவேன்
தீம் தாளம் போட்டு (வை)

திருடன்-வ-ம்:—பாத்துக்கோ ராஜா! இந்த அமாவாசை இருட்டிலே, அர்த்தராத்திரி சமயத்திலே, ஆரும் அரியாமலே, அயர்ந்து நித்திரை செய்வோர்களின் சொத்துகளை அபேஸ் பண்ணிக்கொண்டு போக எறிவந்தேன் அப்பனே இவ்வேளை, ஆனாலும் நாம் வந்து வெகு நேரமாகிவிட்ட படியால் சீக்கிரத்தில் தேட்டைப் போட்டு செல்லவேண்டியதுதான், ஆனாலும் நமது குருவை கொஞ்சம் மனதில் போட்டுக்கொண்டு தேட்டைக்கு ஏரலாம் நயினு!

குருவணக்கம்.

நாடக அரங்கமதில் நடனமது புரிந்துமே
நற்கியாதி வாய்ந்த சிங்கம்

தேடரிய புகழுற்ற குமரகுரு தவத்தினுல்
தாரணியில் பிறந்த சிங்கம்
நாடரிய கவர்ன்மெண்ட் அண்ணுமலைப் பிள்ளையவர்களால்
ஐந்தா நெம்பர் பில்லை பெற்ற சிங்கம்—கள்ள
வேடமதில் நிகரற்று காலஞ்சென்ற ஸ்ரீமான்
ஆர். நடராஜன் பரம்பரையில் அவதரித்த கள்ள சிங்கம்

சீர்பெருகும் சென்னைமா நகரமாம்-அதை
சேர்ந்ததோர் பாப்பன்ஸ் பிராட்வே ரோட்டினது
புகழ் பெருகும் ஜோதியாம்
பார்புகழும் பாவந்தீர்த்தம்மன் கோவிலது மகிமையாம்
ஸ்ரீ பால ராம விநோத பக்த ஜன சபையினது கியாதியாம்
வாய்மையது வாய்ந்து வணிகரது நீதியாம்
கிழண்டை வாடையாம் 1/105-ம் நெம்பரில்லமாம்
அவ்வில்லமதில் வசித்து வரும்—எனது குரு
ஆருக்கும் அடங்காத அஞ்சா நெம்பர் கள்ளனும்
காருண்ய தங்கமாம் கவிராஜ சிங்கமாம்
கண்கண்ட பாவலர் நாவலர் யாவர்களும் ஆசிகூற
இந்த காசினியில் பற்பலநூல்களை யியற்றுவித்து புகழுற்ற
கனமிகும் கவிராஜ தங்கமாம்
ஆறுமா முகனருளை அனுதினமும் கைகொண்டு
அகிலமதில் கவிபொழியும் அரியாத பாலனும்
எங்கும் புகழ் தீரனும் எதிரற்ற மாரனும்
எந்தன்குரு சென்னை, முத்தியாலுப்பேட்டை
பாலசந்தச்சரபக்கவி, வி. ஏ. தியாகராஜனை
ஆசீர்வதிப்பீரே என் சபையோரே—

அன்னவரின் சீடனும்—நான்—அரியாத பாலனும்
அகங்கொண்ட கள்ளர்களை அடக்கி ஒடுக்கி
அடகு போடும் கள்ளனும்
பக்ஷமாய் இச்சபையில் பலபேரரியவே
தில்லானு, டோமரி, கஜல், காவடிச்சிந்து,
வண்ணச்சிந்து, நொண்டிச்சிந்து கொடிச்சிந்து,
கிளிச்சிந்து முதலிய பாடல்களைப்பாடி
இங்குவந்திருக்கும் சபையோரை
களிக்கச் செய்யும் பாலனும்

பாலப்பிராயமாம் பங்கமில்லா சிங்கமாம்—இந்த
பார்புகழும் பாலகவி
பி. எஸ். ஷண்முகவேலனை காப்பாற்ற என் குருவே
உனை போற்றினேனே.

திருடன்-வ-ம் :—ஆ! பாத்துக்கோ அண்த்தே! நமக்கோ டயிம் பாராய்விட்டது. இனி இவ்விடத்தில் இருக்கப்படாது, தேட்டைக்கு ஏறலாம் நயினி, (திரும்பிப் பார்த்து) ஐயோ! நாம் கோரிய தெய்வம் நேரில் வந்தாப்போல அதோ யாரோ ஒரு குட்டி வர்ரா படா ஜோக்குலே, ஆனாலும் அவள் நம்மைப் பார்த்துவிட்டால் அப்படியே எங்காகிலும் ஏறிவிடுவாள் அப்பனே, ஆதலால் நாம் ஒரு புறமாக சற்று மறைந்திருக்கலாம்.

திருடன் ஒருபுறமாக படுத்துக்கோள்கிறான் அமராவதி வருகிறாள்.

அமராவதி தரு.

மானுமதுரையிலே என்ற மெட்டு.

அதிரூபனை காணாமலே—நான்—அலைகுரேனே கானகத்தில்
எங்கு சென்று தேடுவேனோ எந்தன் துரை நாயகனை (அ)

அம-வ-ம் :—ஆ! என்ன செய்யப் போகிறேன்? அதிரூபா! அன்று உன்னை நந்தவனத்தில் கண்ட நாள்முதல் உன்மீதே காதலுற்று வருந்தி தவிக்கின்றேன் அதின்பொருட்டுதான் இங்கு தேடியும் வந்திருக்கின்றேன். (சுற்றிப் பார்த்து) ஹா! இதுயென்ன தர்மசங்கடம், "கிணறு வெட்ட போன இடத்தில் பூதம் புறப்பட்டதைப்போல்" யான் என் ஆசைக் காதலனைத் தேடிவந்த இடத்தில் யாரோ ஒரு கள்ளன் படுத்திருக்கின்றானே இவனிடத்திலிருந்து எப்படி தப்பித்துச் செல்வது (சற்றுயோசித்து) ஆனால் இவனிடம் நாம் ஒரு பயித்தியக்காரிபோல் அபிநயித்தால் இவன் நம்மை விட்டு ஓடிவிடுவான். பிறகு நமது காரியமும் சித்திக்கும் ஆம் இதுதான் தகுந்த மார்க்கம் அப்படியே செய்யலாம்.

மறுபடியும் பாடிக்கொண்டே திருடனிடம் வருகிறாள்.

அதிரூபனைக் காணாமலே—நான்—அலைகுரேனே கானகத்தில்
எங்கு சென்று தேடுவேனோ எந்தன் துரை காதலனை (அ)

அமராவதி திருடனின் சிகையைப் பிடித்து இழுத்து வருகிறாள்.

அம-வ-ம் :—அதிரூபா ! அதிரூபா !

திரு-வ-ம் :—ஐயையோ ! ஐந்து ரூபாவா ?

அம-வ-ம் :—ஐயையோ ! ஐந்து ரூபாவா ?

திரு-வ-ம் :—ஐயோ ! யாரிடத்தில் கொடுத்தே நான் பார்க்க வில்லையே?

அம-வ-ம் :—ஐயோ ! யாரிடத்தில் கொடுத்தே நான் பார்க்க வில்லையே?

திரு-வ-ம் :—அட ஓ ! இது என்ன கூட கூட பேசுதே ?

அம-வ-ம் :—அட ஓ ! இது என்ன கூட கூட பேசுதே ?

திரு-வ-ம் :—ஐயோ ! இது என்ன காளியோ ?

அம-வ-ம் :—ஐயோ ! இது என்ன காளியோ ?

திரு-வ-ம் :—இல்லே காட்டேரியோ ?

அம-வ-ம் :—இல்லே காட்டேரியோ ?

திரு-வ-ம் :—இல்லே இந்த ஊர் கார்க்கும் பிடாரியோ ?

அம-வ-ம் :—இல்லே இந்த ஊர் கார்க்கும் பிடாரியோ ?

திரு-வ-ம் :—தாயே! நான் செய்த பிழையெல்லாம் மன்னிக்க ணும் ?

அம-வ-ம் :—தாயே! நான் செய்ய பிழையெல்லாம் மன்னிக்க ணும் ?

திரு-வ-ம் :—ஐயோ ! இது என்ன சும்மா கூட கூட பேசுதே ?

அம-வ-ம் :—ஐயோ! இது என்ன சும்மா கூட கூட பேசுதே ?

திரு-வ-ம் :—ஆ உங் கொய்த்தா என்னம்மா ?

அம-வ-ம் :—ஆ உங் கொய்த்தா என்னம்மா ?

திரு-வ-ம் :—ஆ ! நம்ப யார் தெரியுமா ? உனக்கு.

அம-வ-ம் :—ஆ ! நம்ப யார் தெரியுமா ? உனக்கு.

திரு-வ-ம் :—ஐயோ ! எங்கம்மடி யம்மா !

அம-வ-ம் :—ஐயோ ! எங்கம்மடி யம்மா ?

திரு-வ-ம் :—என்ன ! கூட கூட பேசுரியே ?

அம-வ-ம் :—என்ன ! கூட கூட பேசுரியே ?

திரு-வ-ம் :—ஐயோ ! பாட்டுகூட பாடுவேபோல தெரியுதே ?

அம-வ-ம் :—ஐயோ ! பாட்டுகூட பாடுவேபோல தெரியுதே ?

திரு-வ-ம் :—நான் பாடுவேன்.

அம-வ-ம் :—நான் பாடுவேன்.

திரு-வ-ம்:—எதோ பாடு பார்க்கலாம்?
அம-வ-ம்:—எதோ பாடு பார்க்கலாம்?

திருடன் தரு.

ஜனகன் மகளல்லவோ சீதைப் பெண்ணே கண்ணே
அவனல்லவோ கொண்டுபோனுன் ராவணசாமி

அமராவதி தரு.

ஜனகன்மகளல்லவோ சீதைப்பெண்ணே கண்ணே
அவனல்லவோ கொண்டுபோனுன் ராவணசாமி

திருடன் ஜத்தி.

பம்பம் பம்பள பம்பம் பம்பள பம்பள பம்பள
பம்பள பம்பள பலே பலே பல்
தாதித்தகதிமிதா தகதளாங்கு
தத்தரிகிட தகதரிகிட
ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம் (ஜ)

அமராவதி ஜத்தி.

பம்பம் பம்பள பம்பம் பம்பள பம்பள பம்பள
பம்பள பம்பள பலே பலே பல்
தாதித்தகதிமிதா தகதளாங்கு
தத்தரிகிட தகதரிகிட
ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம்
ததிங்கிணத்தோம் (ஜ)

திரு-வ-ம்:—ஆ! வாரேவா பலே நயிஸா பாடுரியே?
அம-வ-ம்:—ஆ! வாரேவா பலே நயிஸா பாடுரியே?

திரு-வ-ம்:—எதோ இன்னெரு பாட்டு பாடு பார்க்கலாம்.
அம-வ-ம்:—எதோ இன்னெரு பாட்டு பாடு பார்க்கலாம்.

திருடன் தரு.

காட்டுக்குள்ளே மவனே போகாதேடா—உன்னை
காடிபுலி உன்னை குத்துமோடா (கா)

அமராவதி தரு.

காட்டுக்குள்ளே மவனே போகாதேடா—உன்னை
கரடிபுலி உன்னை குத்துமோடா (கா)

திரு-வ-ம்:—அப்போ தில்லாலே பாட்டுகூட பாடுவேபோல இருக்குதே?

அம-வ-ம்:—அப்போ தில்லாலே பாட்டுகூட பாடுவேபோல இருக்குதே?

திருடன் கண்ணி.

தங்கத் தில்லாலே மெட்டு.

அகிலம்புகழ் தீரனடி அதிவினோத கள்ளனடி
அஞ்சாநெம்பர் கேடியடி என் பைத்தியக்காரபெண்ணே-நான்
ஆருக்குமே அஞ்சமாட்டேன் நீ நைசா பாடடிகண்ணே

அமராவதியும் அப்படியே பாடுகிறாள்.

திருடன் கண்ணி.

அந்தர் தினுசுடப்பான் அழகுள்ள ஜம்பிங் டப்பான்
விந்தையுடன் போடடி என்பைத்தியக்காரபெண்ணே-உன்னை
விடுவேனென்று எண்ணிடாதே நீ நைசா பாடடிகண்ணே

அமராவதியும் அப்படியே பாடுகிறாள்.

திருடன் கண்ணி.

கள்ளர்குல தெய்வமடி கவிராஜ தீரனடி
தெள்ளுதமிழ் கள்ளனடி என் பைத்தியக்காரபெண்ணே-நான்
தியாகராஜன் சீடனடி நீ நைசா பாடடிகண்ணே

அமராவதியும் அப்படியே பாடுகிறாள்.

திருடன் கண்ணி.

ஜெகஜாலக் கள்ளனடி ஜெகம்புகழும் குள்ளனடி
ஜம்பிங் டப்பான் காரனடி என்பைத்தியக்காரபெண்ணே-அடி
ஷண்முகவேல் யான்தானடி நீநைசா பாடடிகண்ணே

அமராவதியும் அப்படியே பாடுகிறாள்.

திரு-வ-ம்:—ஐயோ கடவுளே! இது என்ன இப்படியே கூட கூட பேசுது, பாடுவதுபோலவே பாடுது, ஆடுவதுபோலவே ஆடுதே.

அமராவதியும் அப்படியே சொல்லுகிறாள்.

திரு-வ-ம் :—இது யாரோ தெரியிலே, எனக்கே சந்தேகமா யிருக்குது ? எப்படியாவது தப்பித்து செல்ல வழி தேடிக்கொள்ள வேண்டியது தான்.

அமராவதியும் அப்படியே சொல்லுகிருள்.

திரு-வ-ம் :—ஏ ! பொம்பளே ! எனக்கு நேரமாகுது நான் வீட்டுக்கு போவுணு நீ போரையாம்மா நானு போகிறேன் ?

அம்-வ-ம் :—ஏ ! பொம்பளே ! எனக்கு நேரமாகுது நான் வீட்டுக்கு போவுணு நீ போரையாம்மா நானு போகிறேன் ?

இருவரும் உள்ளே செல்கின்றனர் மறுபடியும்
திருடன் மாத்திரம் வருகிருன்.

திரு-வ-ம்:—பாத்துக்கோ எப்பா, சனியன் ஒழிந்தது ! ஆனல் இனி தேட்டைக்கு ஏறிபார்க்கலாம் ? (திரும்பிப்பார்த்து) ஐயோ ! இது யாரோ ஒருவன் வருகிருன், அவனை தான் வழியடித்து பொருளை அபகரிக்கவேண்டும். ஆனல் நாம் ஒருபுறமாக இருக்க லாம்.

திருடன் ஒருபுறமாக படுத்துக்கொண்டு இருக்கிருன்
இதற்குள் அதிரூபன் வருகிருன்.

அதிரூபன் தரு.

அமராவதியை காணுமலே—நான்—அலேகுரேனே கானகத்தில்
எங்குகண்டு தேடிடுவேன் எந்தன்குண சுந்தரியை

அதி-வ-ம் :—ஹா ! அமராவதி ! அன்றுயான் நந்தவனத்தில் சயனித்திருக்கும் சமயம் நீ அவ்விடத்தில் வந்து என் மீது காத லித்து என்னைத்தொட்டு முத்தமிட்டு உனது கணையாழியையும் மாற் றிச் சென்ற நாள் முதல் யான் உன்னுடைய காதலையே கை கொண்டு தேடித்திரிந்து இக்கானக மடைந்தேன், இக்கானகமோ மிகவும் பயங்கர மிருந்ததாக இருக்கின்றது. (அதிரூபன் திரும்பித் திருடனைப்பார்த்து) ஹா ! இனி என்ன செய்வது ? அதோ யாரோ ஒருகள்ளன் பதுங்கியிருக்கின்ருன் இவனிடத்திலிருந்து எப்படித் தப்பிச் செல்வது, ஆனல் ஒரு மார்க்கம் செய்யலாம் அதாவது நாம் பைத்தியம் கொண்டவன்போல் பிணற்றித்திரிந்து அத்திரு டனை மிரட்டினல் ஓடிப்போய் விடுவான் பிறகு நாம் அமராவதி யைத்தேடிச் செல்லலாம்.

அதிரூபன் தரு.

அமராவதியை காணுமலே அலேகுரேனே கானகத்தில்
எங்குகண்டு தேடிடுவேன் எந்தன் குண சுந்தரியை (அ)

அதிரூபன் திருடனின் சிகையைப்பிடித்து இழுத்து வருகிருன்.

அதி-வ-ம் :—அமராவதி! அமாரவதி!

திரு-வ-ம் :—ஐயையோ! இங்கேயில்லேயே அம்பட்டன் வாராவதி?

அதி-வ-ம் :—ஐயையோ! இங்கேயில்லேயே அம்பட்டன் வாராவதி?

திரு-வ.ம் :—ஐயா! நீங்கள் யாரோ?

அதி-வ-ம் :—ஐயா! நீங்கள் யாரோ?

திரு-வ-ம் :—உங்கள் பெயரென்ன கொஞ்சம் சொல்லுங்களேன்?

அதி-வ-ம் :—உங்கள் பெயரென்ன கொஞ்சம் சொல்லுங்களேன்?

திரு-வ-ம் :—அடே இது யென்ன கூட கூட பேசுதே?

அதி-வ-ம் :—அடே இது யென்ன கூட கூட பேசுதே?

திரு-வ-ம் :—ஐயா யாரையா நீ?

அதி-வ-ம் :—ஐயா யாரையா நீ?

திரு-வ-ம் :—ஆ உங்கொப்பா குடு குடு என்ன நீ சும்மா சும்மா பேசுரே?

அதி-வ-ம் :—ஆ உங்கொப்பா குடு குடு என்ன நீ சும்மா சும்மா பேசுரே?

திரு-வ-ம் :—ஆ வாரேவா! என்ன நைன நம்பகிட்டவே ராங் பண்ரே?

அதி-வ-ம் :—ஆ வாரேவா! என்ன நைன நம்பகிட்டவே ராங் பண்ரே?

திரு-வ-ம் :—என்ன படே சாலா பேசுரியே?

அதி-வ-ம் :—என்ன படே சாலா பேசுரியே?

திரு-வ-ம் :—அடே உங்க பழைய சோத்து பரமசிவமே!

அதி-வ-ம் :—அடே உங்க பழைய சோத்து பரமசிவமே!

திரு-வ-ம் :—ஆ! உங்கொயித்தா போட்டா மொகப்பட்டா மூக்கு வெத்திலே பாக்கு போட்டுக்கொள்ளும் தெரியுமா.

அதி-வ-ம் :—ஆ! உங்கொயித்தா போட்டா மொகப்பட்டா மூக்குவெத்திலே பாக்கு போட்டுக்கொள்ளும் தெரியுமா?

திரு-வ-ம் :—அடே! ஒரு சனியன் ஒழிந்தது இரண்டாவது சனியன் வந்து பிடித்துக்கொண்டதே?

அதி-வ-ம் :—அடே! ஒரு சனியன் ஒழிந்தது இரண்டாவது சனியன் வந்து பிடித்துக்கொண்டதே?

திரு-வ-ம் :—ஐயோ! இவர் யாரோ?

அதி-வ-ம் :—ஐயோ! இவர் யாரோ?

திரு-வ-ம் :—எங்கப்பன் முத்துவீரக் கடவுளோ?

அதி-வ-ம் :—எங்கப்பன் முத்துவீரக் கடவுளோ?

திரு-வ-ம் :—இல்லே பாவாடைராயனே?

அதி-வ-ம் :—இல்லே பாவாடைராயனே?

திரு-வ-ம்:—ஆ! வா ராஜா வா! நம்பகிட்டவே சால்பண்ரியே?

அதி-வ-ம் :—ஆ! வா ராஜா வா! நம்பகிட்டவே சால்பண்ரியே?

திரு-வ-ம் :—நம்ப யார் தெரியுமா உனக்கு?

அதி-வ-ம் :—நம்ப யார் தெரியுமா உனக்கு?

திரு-வ-ம் :—போதும் நிறுத்து நைனு.

அதி-வ-ம் :—போதும் நிறுத்து நைனு.

திரு-வ-ம் :—சரி எதாவது பாட்டு பாடுவியா?

அதி-வ-ம் :—சரி எதாவது பாட்டு பாடுவியா?

திரு-வ-ம் :—என்னென்னு பாட்டு பாடுவே?

அதி-வ-ம் :—என்னென்னு பாட்டு பாடுவே?

திரு-வ-ம் :—தில்லானு, தெம்மாங்கு, கஜல், காவடிச்சிந்து முதலிய பாடல்களெல்லாம் பாடுவேன்.

அதி-வ-ம் :—தில்லானு, தெம்மாங்கு, கஜல், காவடிச்சிந்து முதலிய பாடல்களெல்லாம் பாடுவேன்.

திரு-வ-ம் :—சரி பாடு பார்க்கலாம்?

அதி-வ-ம் :—சரி பாடு பார்க்கலாம்?

திருடன் வண்ணச்சிந்து.

நானிலத்து மங்கையர்கள் நாடி கூடி பேசிடவே
நாளுக்கொரு நோட்டீஸ்போடும் நாடோடி கள்ளர்களே

ஏனேதா னுங்களுக்கு ஈனமில்லை மானமில்லை
எடுத்துயான் சொன்னபோதும் எங்கள் முன் வருவதில்லை
நாடகத்திலே நடிக்க நாதனில்லா பேர்வழிகள்
பாடல்கள் தனைபிறட்டி பயித்தியக்காரர்களைப்போல்
வாடியே கால்வாயோரத்தில் வந்தமட்டும் பாடிவாரார்
தேடிய பொருளுண்டானல் சிலவுசெய்து தோடாபெற்று
வஞ்சியர்கள் தன்கரத்தில் வளையல்மாட்டிக் கொள்வதைப்போல்
கொஞ்சமேனும் அஞ்சிடாமல் குவலயத்தில் மாட்டிக்கொண்டு
தஞ்சமெனவே திரியும் தருதலைக் கள்ளர்களே
தாளமேளம் விட்டுப்பாடும் தத்துவமற்ற பேர்களே

தாக்குத் தாக்கு என்று உங்கள்
தலைபட்டுப் போகும்படி
மேக்கடித்து ஓட்டத்தமிழ்
பாக்கியம் மிகவே பெற்று

வாக்குக்கார தியாகராஜன் குட்டுவதைப்பார்-உங்கள்
கூடவந்ததார் இங்கே பாடவந்ததார்-கள்ள
ஷண்முகவேலனைக்கண்டு ஓடிப்போனதார்-இந்த (நா)

அதிரூபனும் அப்படியே பாடுகிறன்.

திரு-வ-ம்:—ஆ! வாரேவா! பாடுவதுபோலவே பாடுரியே?
அதி-வ-ம்:—ஆ! வாரேவா! பாடுவதுபோலவே பாடுரியே?
திரு-வ-ம்:—எதோ இன்னொரு பாட்டு பாடு பார்க்கலாம்.
அதி-வ-ம்:—எதோ இன்னொரு பாட்டு பாடு பார்க்கலாம்.

திருடன் கண்ணி.

கார்த்திகா நித்யகல்யாண என்றமெட்டு.

புள்ளிமயில் வேலவனே
போற்றினே னுமைபாலனே
வள்ளியின் மணவாளனே
வானவர்க் கனுகூலனே (4)

திருபனும் அதுபோலவே பாடுகிறன்.

திருடன் ஷி கண்ணி.

சரவணபவ முருகா
சாமளதேகன் மருகா
பரங்கிரி மலைவாழ் குகா
பாடியே துதித்தேன் ஷண்முகா (4)

அதிரூபனும் அதுபோலவே பாடுகிருன்.

திருடன் ஷி கண்ணி.

சென்னைமா நகரிலெங்கும்
சரபக்கவி சந்தம் பொங்கும்
மன்னன் தியாக தங்கம்
மனமகிழ் க சிங்கம் (4)

அதிரூபனும் அதுபோலவே

திரு-வ-ம்:—ஐயோ! டுவதுபோலவே பாடுது, ஆடுவது போலவே ஆடுதே

அதி-வ-ம்:—ஐயோ! டுவதுபோலவே பாடுது, ஆடுவது போலவே ஆடுதே?

திரு-வ-ம்:—ஐயையோ! இது என்ன நம்மைவிட்டு ஒழியாது போல இருக்குதே?

அதி-வ-ம்:—ஐயையோ! இது என்ன நம்மைவிட்டு ஒழியாது போல இருக்குதே?

திரு-வ-ம்:—ஆமாய்யா! இப்போ நீ என்ன சொல்ரே?

அதி-வ-ம்:—ஆமாய்யா! இப்போ நீ என்ன சொல்ரே?

திரு-வ-ம்:—சரிவா! எங்க எஜமானண்டை உன்னை கொண்டு போய் விடுகிறேன் பிறகு நீயும் அவரும் எப்படியாவது போங்கோ.

அதி-வ-ம்:—சரிவா! எங்க எஜமானண்டை உன்னை கொண்டு போய் விடுகிறேன் பிறகு நீயும் அவரும் எப்படியாவது போங்கோ.

திரு-வ-ம்:—சரி வா போகலாம்.

அதி-வ-ம்:—சரி வா போகலாம்.

இருவரும் போகிருர்கள்.

சீன் 8.] [இடம் :—வேறு காடு.

தலைத்திருடன் மற்ற திருடர்களனைவரும் இருக்கின்றனர். இளைய திருடன் அதிரூபனையும், அமராவதியையும் கொண்டுவந்து தலைத்திருடனிடம் விடுகிறான்.

திரு-வ-ம் :—அடியம்மா! காளிகாதேவி! இவருதான் எங்க எஜமான். இப்போ நீவுண்டு இவருண்டு எப்படியாவது போங்க.

அம-வ-ம் :—அடியம்மா! காளிகாதேவி! இவருதான் எங்க எஜமான். இப்போ நீவுண்டு இவருண்டு எப்படியாவது போங்க.

திரு-வ-ம் :—அடே எப்பா! பாவாடைராயா இதோ பாத்தியா இவருதான் எங்களுக்[illegible] பெரியவரு இப்போ நீ இவருகிட்ட காட்டு உன் வேலையெல்[illegible]

அதி-வ-ம் :—அடே [illegible] டைராயா! இதோ பாத்தியா இவருதான் எங்களுக்[illegible] ரு இப்போ நீ இவருகிட்ட காட்டு உன் வேலையெல்[illegible]

அதிரூபனையும் [illegible] தலைத்திருடன் ஆட்டி வைக்கின்றான். [illegible] றகு அமராவதியும் அதிரூபனும் ஒருவர்க்கொருவர் கவனித்து இன்னாரென அறிந்து பிறகு இருவரும் ஒருமிக்கின்றனர்.

இதையறிந்த கள்ளர்கள் பிரமித்து அரசனின் புதல்வனுக்கு வணங்கி திருடர்கள் பிரிந்துச் செல்கின்றனர்.

சுபம்! சுபம்! சுபம்!

ஸ்ரீமான் R. நடராஜாச்சாரியார் உயிர்விடுத்த சாயுச்யகீதம்

பண்டித மோதிலால் நேரை என்ற மெட்டு.

பல்லவி.

மன்னன் நடராஜ சீமான் மடிய காலமோ

அனுபல்லவி.

மடிய காலமோ பொல்லா மறலி ஜாலமோ (ம)

சரணம்.

இன்னகரின் வாழ்வைவிட்டு பொன்னுலக வாழ்வை தொட்டு
சென்றனரே தேவர் முதல் ஆசிகூறவே
ஆசிகூறவே ஈசன் அருளைச்சேரவே (ம)

திருப அமராவதி டிரா

தொகையரா.

வகுல குமரகுரு யெ
உந்தனுக்காய்
வம் செய்ய ஏகாக்ஷரன் அ
ம் பொங்கி நிற்க
னே நீரும் தாணிதனில் மை
த்துவமுடன் பிறந்தீர்
ஞ் சிறு வயது முதல் சங்கீத ஞான
தேர்ச்சிமிக பெற்று வாழ்ந்தீர்.

ஷ் சரணத்தொடர்.

காசினி யெல்லாம் திரிந்து ள வேடமே தரித்து
கண்டவர் திகைப்புறவே ன் நடித்து
கனமுடன்நடித்து சுய ப் படித்து (ம)

தொ

தனக்கொருவர் நிகரின்றி யை நாட்டியே
தரித்தீர் அஞ்சா நெ
உனது பரம்பரையோர் யாவகள் உருகியே புலம்பிட
உத்தமா வைத்தீர் தொல்லே
வினயமுடன் ஆயிரத்தி தொலாயிரத்தி முப்பத்தோராண்டு
அக்டோபர் முதல் தேதியன்று
குணமான குருவாரம் மாலே இரண்டரை மணிக்கெலாம்
கால பாசத்தில் நின்று.

ஷ் சரணத்தொடர்.

சென்றீரோ கலேபதி ஜெகமெலாம் புகழ நிதி
சீரிசைத்தான் தியாகராஜன் வேறில்லே கதி
வேறில்லே கதி மன முருகி தினேநின் (ம)

ம ங் க ள ம்.

இராகம்-தோடி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்கும் புகழ் தங்கும் மங்களம் வெகு
இங்கிர்த மானதோர் ஐங்கர நாதர்க்கும்

அனுபல்லவி.

முகனுக்கும் சிவசுப்ரமண்யர்க்கு
முத்தர் பக்தர் சிவயோகிகளுக்
யின்றியே மைந்தன் பணி

கம்பெனிகளிலும் நட

ன் னிலிம் மாகூ
அச்சிலிட்ட மதுரை முதல்
ட சுகத்தினில் பு
ர பரிபாலித்திடுவே
ர் பாரில் யாவரு
ன் பாடும் சந்தத்திற்

பார்ஸி அதிநூதன

அதிரூப அமராவதி டிராமா

பெற்றது.

விப்பு.

எனதன்பார்ந்த சங்கீதப்பிரிய நண்பர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், வித்வமார்களுக்கும் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பமாவது யாதெனில் அடியிற் கையொப்பமிட்டுள்ள சிறியேனாகிய யான் இந்த "பார்ஸி அதிநூதன அதிரூப அமராவதி டிராமாவை" எனது சிற்றறிவுக்கெட்டியவாறு பல அரிய நூதன வர்னமெட்டுகளை யமைத்து தெள்ளிய நடையில் இயற்றியுள்ளே னாதலால் இந்நூலைக் கண்ணுறும் நண்பர்கள் பிரட்டியாவது அல்லது இதிலுள்ள பாட்டுகளை தனியாக எடுத்தாவது எனது அனுமதி யின்றி அச்சிடுவாரேல்,

விருத்தம்.

இதற்கு உண்டான நஷ்ட ஈடுகளென்ன உண்டோ
அதனையே கவர்ன்மெண்ட் சட்ட மனுவெனும் தவரிடாமல்
இதமுடன் வாங்குவேனென் றன்பர்கள் கவனிப்பீர்தான்
மதுரை முதலியார்க்கின்னூலை மனதார விற்றுள்ளேனே.

இப்படிக்கு
பாலசந்தச்சரபக்கவி
V. A. தியாகரா
1/105, பிராட்டே

னபோதினி" பிரஸ், 302, தங்கசாலை வீதி,

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

A. மதுரைமுதலியாரவர்கள் பதிப்பித்துள்ள

12. டிராமா சரித்திரங்கள்.

பற்பல டிராமா கம்பெனிகளில் நடித்து காட்டிவரும் நூதன டிராமாக்கள் 12-சேர்த்து ஒரே பயிண்டாக செய்து தயாராகயிருக்கிறது வேண்டியவர்கள் உடனே நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

1. கோவலன் டிராமா.
2. சாவித்திரி சரித்திரம்.
3. அல்லி அர்ஜுனா.
4. அரிச்சந்திரா.
5. அதிரூப அமராவதி.
6. சக்குபாய் சரித்திரம்.
7. பாரிஜாத புஷ்பஹரணம்.
8. தூக்[illegible] தூக்கி
9. [illegible]தன் சரித்திரம்.
[illegible]னசவுந்தரி.
[illegible]தாஸ் சரித்திரம்.
[illegible]தாஸ் சரித்திரம்.

இவ்வரிய டிராமாக்கள் 12 [illegible] சேர்த்து அழகிய தாளில் கலிகோபயிண்ட் செய்து தய[illegible]கிறது தேவையுள்ளவர்கள் உடனே ஆர்டருக்கு எழு[illegible] விலை ரூபா 2 0 0.

சதிபதிகளின் மர்மம்

அல்லது

மானிட ரகசிய சாஸ்திரம்.

இதில் வசந்தனுக்கும் சுலோசனவுக்கும், வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச் செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடுப் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்ற விதமும் போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாக சுகிக்க வேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதர்களுக்கு அமிர்த நிலை எந்த காலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும் அதை எவ்விதமாய் நிலைபெயர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதி பகவான் தேவேந்திரனுக்கு அருளிச்செய்த உலோகாயுத சம்மதமுமான விஷயங்கள் அமைந்துளது. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப்போன்ற அரியபெரிய மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றனம். கண்களை கவரும் அழகிய சித்திர படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1.

தேசிய பஜனமிர்தம் விலை ரூ. 2.

முதலியாரால் பதிப்பித்ததாக பார்த்து வ

அநேகர் வேண்டுகோளின்படி 64-படங்களுடன் வெளியிடப்
காம நூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்பவருக்கு
யான 64-லீலா விநோத படங்களுடன் கூடிய கொக்கோக நூ

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்ட

கொக்கோகம்.

முன் விலை ரூபா 2 0 0 தற்சமயம் ரூபா 1 0 0.

அழர்ந்தநிலை சக்கரங்களுடன் கூடிய திருத்தமான 2-ம் பதிப்பு.

ஆதியில் அதிவீரராமபாண்டியன் அருளியது.



இதில் காம உற்பத்தி, காதலர் பெருமை, ஆண்
ஜன்மேந்திரியங்கள், பெண்கள் தேக
அவைகளின் லக்ஷணங்கள், மாதவிடாய்
ந்த நிலை படுக்கையறை நுட்பங்கள், இன்
யம், இன்பகாலத்தில் நிகழுவதென்ன
து தயாராகுதல், இன்பமனுபவிக்க
மை, இதில் காம இச்சை, காமத்தால்
கள், சம்போகம் செய்யவேண்டிய
காணாத சிற்றின்ப மர்மங்களும்
நுட்பங்களும், உண்மையாக இன்
பத்தை அடையவேண்டிய மர்மங்களும், இன்னும்
இதைப்போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள் இதில் காணலாம். மற்றப் போலிப் புத்தகங்கள் போல் அல்ல. இதில் 64 லீலா விநோதப் படங்களுடன் அழகிய தாளில் கலிகோ பயிண்டு செய்து தயாராக இருக்கிறது. விலை ரூ. 2.
தற்சமயம் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 1.

நீங்கள் திரிகாலங்களையும் அறிய விரும்புகிறீர்களா? அப்படியானால்,

ஹிப்நாடிஸ மெஸ்மெரிஸமெனும்

வாயுவேக மனோவசிய சாஸ்திரம்.

இந்நூலில் உலகில் பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப் பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுவதும், சபைதனில் விரலைக் காட்டி மற்றவர்களைத் தூங்கவைக்கும் வழியும், மனோவசிய சக்தியினால் நாம் உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மை செல்வாக்குடன் இருக்க இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும். ஜெர்மனி, அமெரிக்கா, ஆங்கில நாட்டார் அனுபவநூல் சித்திர படங்களுடன் விசித்திர செய்கைகள் அறியும் விசித்திர நூல். இதை வாசித்து வந்தால் இறந்த காலம், நிகழ்காலம் எதிர்காலங்களில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அறிந்துகொள்ளவும் நமது முன்னோர்களுடன் பேசவும், நித்திரை வருவித்தல், நோய்களை நீக்கும் வகை, ஞானதிருஷ்டி நோக்கம், முதலியவைகளை வாசித்து தெரிந்துகொள்ளலாம். விலை ரூ. 1-8-0.

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க் டவுன், சென்னை.

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

20B
15.2